# 4.3 ஒரே சரீரமாக வளருதல்

**வேத வசனம்:** அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். ரோ. 12:5

**அறிக்கை:**
ஒருவருக்கொருவர் மன்னித்து உற்சாகப்படுத்துங்கள். அப்போது நாம் தேவனுடைய குடும்பம் என்பதைப் பிறர் அறிந்துகொள்ளுவார்கள்.

**சத்தியம்:** ஒரே சரீரத்தில் பல அவயவங்கள் இருப்பதுபோல இயேசு கிறிஸ்துவின் திருச்சபையிலும் பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒருவர் துன்பப்படும்போது மற்றவர்களும் துன்பப்படுவார்கள். ஒருவர் மகிழ்ச்சியடையும்போது மற்றவர்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

## பாடக்குறிப்புகள்

* **திருச்சபையே தேவனுடைய சரீரம்** - *எபே.2:19-22, 4:15-16*
* **ஒவ்வொரு அவயவத்திற்கும் வித்தியாசமானச் செயல் உண்டு** - *1 கொரி 12:12-25*
* **நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்** - *எபே. 4:32, மத். 18:21-22, 1 கொரி 12:26*
* **நம்முடைய ஒருமனதின் நோக்கம்** - *ரோமர் 15:5,6*

## வேதப்பகுதி

*1 கொரிந்தியர் 12:12-26*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- ஏன் ஒருமனமும் ஒத்துழைப்பும் முக்கியம்?
- திருச்சபையிலே ஒருமனம் இருப்பதினாலே தேவனுடைய குடும்பம் பலமுள்ளதாயிருப்பது எப்படி?
- நடைமுறையில் நாம் எப்படி மற்றவர்களுடன் ஒருமனமாயிருக்க முடியும்? எபே 4:31:32

## துன்பத்திலும் வளர்ச்சி

எல்லாம் நன்றாயிருக்கும்போது செழித்து வளர்வது எளிது. நெருக்கமும் துன்பமுமே வளர்ச்சியை உற்சாகப்படுத்துகிறது. நட்பு பலமடையவும், குடும்பங்கள் எப்படி ஒருவரிடத்தில் ஒருவர் சார்ந்திருக்க வேண்டுமென்றும், எல்லா சகோதர சகோதரிகளையும் தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவில் வளரச்செய்யவும் நம்மால் முடியும். இப்படி நாம் நம்முடைய நோக்கங்களை புறம்பே தள்ளிவிட்டுத் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றலாம்.

### செயல்

**நீங்கள் எந்தச் சூழலில் இருந்தாலும் தேவன் உங்கள் வாழ்வில் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். இன்று உங்கள் தாலந்துகளைத் தேவனுக்காய்ப் பயன்படுத்துங்கள். தேவனுக்காய் எதைச்செய்தாலும் அதைச் சிறப்பாய் செய்யுங்கள்.**

### சிந்திக்க:

*சபையிலே உங்கள் பொறுப்பு என்ன என்று எண்ணுகிறீர்கள்?*

___

___

### ஜெபம்:

*தேவன் தமது கிருபையால் உங்களைத் தமது திருச்சபையில் ஒரு அங்கமாக மாற்றியதற்காய் அவருக்கு நன்றி சொல்லும் ஜெபத்தை எழுதுங்கள்.*

___

___

___